

# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

08.01.2024

## 02. "ஆராதனைக்கு" ஆதார சத்தியம் என்ன?

"....யார் அதிக அன்புடையவர்கள்? அதைச் சொல்?" என பரிசேயனாகிய சீமோனிடம் இயேசு கேள்வி கேட்டார் (லூக்கா 7:42). இயேசுவை அதிகமாய் அன்புகூர்ந்த ஒரு பாவியாகிய ஸ்திரீ, இயேசுவை ஆராதிக்கும் பாக்கியத்தைப் பெற்று, அவரின் பாதத்தில் கண்ணீர் சிந்தவும், அவர் பாதத்தை ஓயாது முத்தமும் செய்தாள்! இயேசுவை ஊக்கமாய் நேசிக்கும் அன்பின் பெருக்கமே, ஒருவனை அவரது பாதத்தைக் காணும்படி நடத்தி, கண்ணீர்மல்க முத்தம் செய்திடும் ஆராதனைக்குள் நடத்துகிறது! நமது இருதயமான பாத்திரத்தில் நிரம்பி வழியாமல் ஆராதனையும் இல்லை! ஏனெனில், விசுவாசியாகிய சீமோனுக்கு அல்ல, அதிக அன்புகூர்ந்த அந்த ஸ்திரீக்கே.... கண்ணீர் மல்க இயேசுவின் பாதம் தொட்டு ஆராதிக்கும் ஆராதனை கிட்டியது! (லூக்கா 7:45,46).

"நீங்கள் என்னிடத்தில் அன்பாய் இருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்றும் அவ்வாறு கைக்கொள்கிறவனை பிதாவும் நானும் அன்புகூருவோம் என்றும்.... அவனுக்கே தன்னை வெளிப் படுத்துவேன்" என்றும் இயேசு கூறிய வார்த்தைகளைப் பாருங்கள் (யோவான்.14:15,21). எனக்கு முன்பாக இயேசு இல்லாமல், நான் அவரை எப்படி ஆராதிக்க முடியும்?

– ரத்னம்